# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—நாராயணசாமி
தேதி 16.10.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இன்று கர்நாடக மாநிலம் கார்வாரில், INS-சமர்தக் பல்நோக்கு கப்பலை, முறைப்படி கடற்படையில் சேர்த்து வைத்தார்.

- மத்திய அரசின் ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தினால், தேச ஒற்றுமை என்பது, மக்களின் வாழ்க்கை அனுபவமாக மாறி உள்ளது.

- தூய எரிசக்தி துறையில் உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டும் பயணத்தில், நாடு தொடர்ந்து முன்னேறி வருகிறது.

- படித்த இளைஞர்கள், வேலை தேடுபவர்களாக அன்றி, மற்றவர்களுக்கு வேலை கொடுப்பவர்களாக மேம்பட வேண்டுமென, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

## ராதாகிருஷ்ணன்

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், கர்நாடக மாநிலம் கார்வாரில் உள்ள INS-கடம்பா கடற்படை தளத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட,

INS-சமர்தக் பல்நோக்கு கப்பலை முறைப்படி கடற்படையில் சேர்த்து வைத்தார். கடற்படை தலைவர் அட்மிரல் கிருஷ்ணசாமிநாதன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேக் இன் இண்டியா திட்டத்தின் கீழ், தமிழகத்தின் காட்டுப்பள்ளி தனியார் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட இக்கப்பலின் கடல்சார் கண்காணிப்பு பணிகள் மற்றும் ரோந்து பணிகளுக்குத் தேவையான எல்லா நவீன வசதிகளும் இடம் பெற்றுள்ளன. ஆயுத பரிசோதனை வசதிகள், தொலை நிலை உணர் கருவிகள் உள்ளிட்ட வசதிகளும் இதில் அடங்கும். பேரிடர் காலங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்கும் பணிகளுக்கு ஏற்றதாகவும் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கடற்படை நிகழ்ச்சியைத் தொடர்ந்து குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று மாலை, கேரள மாநிலம் கோழிக்கோட்டில், நவராத்திரி கலை விழாவை தொடக்கிவைக்கிறார்.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்,** இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம்**

என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு இடையே மாணவர்கள், ஆசிரியர்கள், மொழிகள், உணவுப் பழக்கங்கள், மற்றும் கலாச்சார மரபுகளை பரிமாறிக் கொள்ளும் வகையிலான, அரசின் ஒரே **பாரதம்-உன்னத பாரதம்** இயக்கத்தினால் ஏற்பட்டுள்ள பலன்கள் குறித்து, இன்று, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

இந்தியாவில், **வேற்றுமையில் ஒற்றுமை** என்ற கருத்து, பெரிய அளவில் கொண்டாடப்பட்ட போதிலும், நடைமுறையில் இதுகுறித்த அனுபவங்கள், ஒரே சீராக இல்லாத நிலைதான், நீண்டகாலமாக நிலவி வந்தது. ஒரு பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள், இதர பிராந்தியத்தினரின் மொழி மற்றும் கலாச்சார மரபுகள் குறித்து சரியாக புரிந்து கொள்ள முடியாமல் போனதற்கு, மக்கள் நிலையிலான தொடர்புகள் போதிய அளவில் இல்லாததே காரணமாக இருந்தது.

இந்நிலையை மாற்றவே, மாநிலங்களுக்கு இடையில், மாணவர்கள், ஆசிரியர்கள், மொழிகள், உணவுப் பழக்கங்கள், மற்றும் கலாச்சார

மரபுகளை, சுழற்சி முறையில் பரிமாறிக் கொள்ளும் வகையிலான, ஒரே பாரதம்-உன்னத பாரதம் இயக்கத்தை, மத்திய அரசு கொண்டு வந்தது.

இந்த இயக்கத்தின் கீழ், அரியானாவைச் சேர்ந்த பள்ளியில் தெலுங்கு மொழி கற்றுத் தரவும், தமிழக மாவட்டத்தில் லடாக் மக்களை வரவேற்று விருந்தோம்பல் செய்யவும், மேலும் இத்தகைய வேறு பல பரிமாற்றங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படுவதால், ஒரு மாநில மக்கள், மற்றொரு மாநிலத்தைச் சேர்ந்த மக்களுடன் கலந்து பழகிப் புரிந்து கொள்ளவும், சொந்த பெருமைகளை விட மற்றவர்களுக்கான வாய்ப்புகளுக்கு அதிக முக்கியத் துவம் அளிக்கவும் ஏதுவாகி உள்ளது.

ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தினால், தேச ஒற்றுமை என்பது, அரசியல் சாசனக் கொள்கை என்பதற்கு மேல், மக்களின் வாழ்க்கை அனுபவமாகவே மாறி இருப்பதில், ஐயமில்லை.

## தமிழ்நாடு-நூலகம்

கோவையில் 300 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம்- நூலகம் மற்றும் அறிவியல் மையத்தை தமிழக முதலமைச்சர் திரு விஜய் இன்று திறந்து வைத்து, அதன் பல்வேறு பகுதிகளை பார்வையிட்டார். கோவை காந்தி புரம் பகுதியில் 7 ஏக்கர் நிலப்பரப்பில்

அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுலகத்தில், டிஜிட்டல் படிப்பகம், கோளரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இடம் பெற்றுள்ளன. தமிழக முதலமைச்சர் இன்று கோவையில் சுமார் 408 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களையும் தொடக்கி வைத்து, சுமார் 32 கோடி ரூபாய் மதிப்பிலான 144 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். 9 ஆயிரத்து 343 பயனாளிகளுக்கு, மொத்தம் 34.72 கோடி ரூபாய் நலத் திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார். முன்னதாக தமிழக முதலமைச்சர் கோவையில் நடத்திய சாலை பவனியின் போது, ஏராளமான மக்கள் சாலையின் இருபுறமும் கூடி சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

## பனை வெல்லம்

தமிழகத்தில் தயாரிக்கப்பட்டு, ஐரோப்பிய ஒன்றியத்தால் சான்றளிக்கப்பட்ட, ஆயிரத்து 755 டன் ஆர்கானிக் பனை வெல்லத் தூள், வேளாண் பொருள் மற்றும் வேளாண் பதனீட்டுப் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்தின் உதவியுடன், நேற்று ஈரோடு மாவட்டத்தில் இருந்து, பல்கேரியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பாரம்பரிய பனைப் பொருட்களை, உலகச் சந்தையில் அறிமுகப் படுத்துவதில், இது, மிக முக்கிய நடவடிக்கை என்று மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தூய எரிபொருள்

தூய எரிசக்தி துறையில் உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டும் பயணத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில், நாடு தொடர்ந்து முன்னேறி வருகிறது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு..

தூய எரிசக்தி துறையில் உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, வெளிநாடுகளுக்கு, ஆண்டு தோறும் 3 லட்சம் டன் தூய ஹைட்ரஜன் வழங்குவதற்கான ஒப்பந்தங்களை, இந்திய நிறுவனங்கள் இறுதி செய்து இருப்பதாக, புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இத்தகைய ஒப்பந்தங்களை பெறக் கூடிய நாடுகளின் பட்டியலில், தற்போது இந்தியா, 3-ஆம் இடம் வகிப்பதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். புதிய பொருளாதாரம் குறித்த Bloom-berg பேரவை மாநாட்டில், இந்தியாவின் சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து வெளியான தகவல் கையேட்டில் இத்தகவல் இடம் பெற்றுள்ளதாக, அமைச்சர் தெரிவித்துள்ளார். தூய ஹைட்ரஜனில் இருந்து தயாரிக்கப்படும் 10 லட்சம் டன் பசுமை அம்மோனியாவை வெளிநாடுகளுக்கு வழங்கும் ஒப்பந்தங்களும் இதில் அடங்கும் என அவர் கூறி உள்ளார்.

## கைலாஷ்நாதன்

படித்த இளைஞர்கள், வேலை தேடுபவர்களாக அன்றி, மற்றவர்களுக்கு வேலை கொடுப்பவர்களாக மேம்பட வேண்டுமென புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமுதாயக் கல்லூரி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இளைஞர்கள் தொழில் முனைவர்களாக மேம்பட ஸ்கில் இண்டியா, ஸ்டார்ட்-அப் இண்டியா, மேக் இன் இண்டியா போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார். இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் இளைஞர்கள் அதிகம் உள்ள நிலையில் நாட்டில் மொத்தம் உள்ள வேலை வாய்ப்புகளில் 2.5 சதவிகிதம் மட்டுமே அரசுத் துறை சார்ந்தது என்பதையும், இதர எல்லா வேலை வாய்ப்புகளும் தனியார் துறையினரே வழங்கி வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். விழாவின் போது லாஸ்பேட் சமுதாயக் கல்லூரியின் புதிய கட்டிடத்தை, துணை நிலை ஆளுநர் திறந்து வைத்தார்.நாட்டிலேயே முதல் முறையாக 1955-ஆம் ஆண்டில் தொடக்கப்பட்ட இந்த சமுதாயக் கல்லூரியில், வேலை வாய்ப்பிற்கு ஏற்ற பல படிப்புகள் வழங்கப்படுவதையும் இக்கல்லூரியில் பயின்றவர்கள், விளையாட்டு, தொழில்-வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டி

பாராட்டினார். புதுச்சேரி பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் பிரகாஷ்பாபு, உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி-நியமனம்

புதுச்சேரி அரசின் **துணை** போக்குவரத்து **ஆணையர்** திரு வினய்ராஜ், தற்காலிக அடிப்படையில், **புதுச்சேரி** நகராட்சி **ஆணையர்** பொறுப்பை, கூடுதல் பொறுப்பாக கவனிப்பார் என, மாநில அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை உத்தரவிட்டுள்ளது. அடுத்த உத்தரவு வெளியாகும் வரை, இந்த உத்தரவு செல்லுபடியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், காவல், கலால், மின்சாரம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள 37 அதிகாரிகள், பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த 45 உதவியாளர்கள், கண்காணிப்பாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

## வானிலை

இன்று, கோவை, நீலகிரி, கன்னியாகுமரி, மற்றும், நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தேனி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம்,கடலூர், தஞ்சை, நாகை, திருவாரூர்,

மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், தமிழகத்தின் இதர பகுதிகளில் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 22-ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, குமரி மாவட்டம் அடையாமடையில், 18 செமீ மழை பதிவாகி உள்ளது.

## காரைக்கால்-ஜிப்மர்

உலக மயக்கவியல் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, நோயாளி பராமரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் மயக்கவியலின் பங்கு என்ற கருப்பொருள் அடிப்படையில் காரைக்கால் ஜிப்மரில் நடைபெற்ற 4 நாள் செயல்முறை பயிற்சி இன்று முடிவடைந்தது. இதய துடிப்பு நின்றவர்களை உடனடியாக கண்டறிதல், இருதய- நுரையீரல் உயிரிப்பித்தல், மற்றும், தானியங்கி de-fibrilator கருவியின் பயன்பாடு குறித்து, இப்பயிற்சியில், செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. அறுவை சிகிச்சை அறைக்கு வெளியிலும், மயக்கவியல் நிபுணர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை எடுத்துக் கூறும் வகையிலான இப்பயிற்சியில், ஜிப்மர் மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள், மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## சுரங்கத் தொழில்

வரும் நவம்பர் 15-ஆம் தேதி தொடங்குவதாக இருந்த, இந்தியா சுரங்கத் தொழில் வாரக் கொண்டாட்டங்கள், அடுத்த ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக, மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. சுரங்கத் தொழில் நிறுவனங்கள் உட்பட சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் ஆலோசனை அடிப்படையில் இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், நிறுவனங்கள், கண்காட்சியாளர்கள், மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் அதிக அளவில் பங்கேற்க இதனால் ஏதுவாகும் என்றும் மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இன்று கர்நாடக மாநிலம் கார்வாரில், INS-சமர்தக் பல்நோக்கு கப்பலை, முறைப்படி கடற்படையில் சேர்த்து வைத்தார்.

மத்திய அரசின் ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தினால், தேச ஒற்றுமை என்பது, மக்களின் வாழ்க்கை அனுபவமாக மாறி உள்ளது.

தூய எரிசக்தி துறையில் உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டும் பயணத்தில், நாடு தொடர்ந்து முன்னேறி வருகிறது.

படித்த இளைஞர்கள், வேலை தேடுபவர்களாக அன்றி, மற்றவர்களுக்கு வேலை கொடுப்பவர்களாக மேம்பட வேண்டுமென, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------------